முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1655

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.04.2024,** புதன்கிழமை

1. மாதர்ம ராஜனே அரங்கா
   மண்ணுலகம் காக்க வந்த தேசிகா
   பூதலத்தில் உன் பெருமை கூறி
   புகலுவேன் சுப்ரமணியர் யானும்
2. அரங்கன் உமக்கு சக்தி பெருக
   ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 28 ம் நாள், 10.04.2024, புதன்கிழமை)
   ஆசியதும் அரங்கன் வழி இந்த உலகம் படைகொண்டு வர
   ஆற்றல்பட உலகம் ஞான லோகமாக
3. தடையற ஞானிகள் ஆளுகின்ற ஞான பூமியாக
   தர்மபலமிக்க ஞான சக்தியுமாக மாறும்
   ஆகவே அற்புதத்தை படைக்க
   அரங்கன் வழி ஆறுமுகன் யான்
4. உலகுக்கு ஆக்கம் தர
   அகிலத்தார் பிரணவக்குடில் நோக்கி வந்தால் போதும்
   உலகத்துக்கு மாற்றம் நிகழும்
   ஓங்காரம்பட அரங்கனின் சன்மார்க்க நெறியை
5. உலக வேதமாக ஏற்று
   உலகோர் பின்பற்றி தர்மசாலை அமைத்தால்
   உலகமெல்லாம் தர்மபலம் கூடி
   உலகோர்க்கு தர்ம ஞான
6. உயர்வான ஞானிகளின் ஆட்சி
   பெருமைபட அரங்கன் தொண்டர்களால் அரங்கேறும்
   அரங்கேற அகிலத்தில் ஆறுமுகன் சூட்சும
   ஆற்றல் பெருக்கம் தருகின்றேன்

7. அன்னதனால் இந்த மகிமை அறிந்து உலகோர்
ஓங்காரக்குடில் நோக்கி வந்தால்
உலகுக்கு மாற்றம் சடுதி நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–